// மிக அவசரம் // // மிக முக்கியம் //

# பள்ளிக்கல்வி இயக்கக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலரின் செயல்முறைகள், சென்னை-06

ந.க.எண்.008857/ அகத / 2023, நாள்.13.02.2024

பொருள் : பள்ளிக்கல்வித் துறை – அகத்தணிக்கை – அனைத்து அரசு / நிதியுதவி பள்ளிகள் / பயிற்சி நிலையங்கள் மற்றும் சார்ந்த அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் அகத்தணிக்கை – முதன்மை / மாவட்ட / வட்டாரக்கல்வி அலுவலர்களால் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு தடையின்மைச் சான்று (NOC) வழங்கிய விவரம் – சார்ந்து.

பார்வை :

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ஓ.மு.எண்.48853/அகத்தணிக்கை (நி.ஆ(ம)மு.க.அ) /2023-1, நாள்.28.09.2023
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் நி.மு.எண்.3858/அகத்தணிக்கை/ 2024-1, நாள்.31.01.2024

---

பள்ளிக்கல்வி இயக்கக அகத்தணிக்கை மூலம் அனைத்து வகைப் பள்ளிகள் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட அகத்தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தணிக்கை தடைகள் மீது நடவடிக்கை மேற்கொண்டு தடைகளை நிவர்த்தி செய்திட பார்வை 1-ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

2. மேலும், தணிக்கை தடைகள் நீக்கம் செய்வது தொடர்பாக அச்செயல்முறைகளில் பத்தி எண்.I, வரிசை எண்.5-ல் குறிப்பாக " **அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக்கல்வி) தணிக்கை துறையால் அனைத்து வகைப் பள்ளிகள் மற்றும் முதன்மை / மாவட்ட / வட்டாரக் கல்வி அலுவலகங்களில் நாளது தேதி வரை அகத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை அறிக்கை பெறப்பட்ட பின்னரே தடையின்மை சான்று வழங்க வேண்டும்**" என தெரிவிக்கப்பட்டது.

3. அதனைத் தொடர்ந்து தற்போது பார்வை 2-ல் காணும் செயல்முறைகளில் பத்தி 1 (ஈ)-ல்" **ஓய்வுப் பெற்ற / பெறும் நாள் வரை தணிக்கை செய்யப்பட்டு பெறப்பட்ட தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மீது முந்தைய மற்றும் நடப்பு நிதி சார்ந்த தணிக்கை தடைகள் குறிப்பாக 21(இ) மற்றும் 21(உ) ஏதும் நிலுவையில் இல்லை என்பதை உறுதி செய்து, அதன் பின்னரே சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு தடையின்மை சான்று (NOC) வழங்கப்பட வேண்டும்** ". என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. தற்சமயம், பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் ஓய்வு பெற்ற வட்டாரக்கல்வி அலுவலர்கள்/ தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள் / இதர பணியாளர்களுக்கு **தணிக்கை அறிக்கை பெறும் முன்னரே தடையின்மை சான்று (NOC) வழங்கப்பட்டு வருகிறது** என கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

5. எனவே, பார்வை 1 மற்றும் 2-ல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி இத்துடன் **இணைக்கப்பட்ட படிவத்தினை உடன் பூர்த்தி செய்து 21.02.2024-க்குள் இவ்வியக்ககத்திற்கு அனுப்பிவைக்குமாறு** அனைத்து மாவட்ட முதன்மை / மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக்கல்வி) / வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – படிவம் 1

நிதி ஆலோசகர் மற்றும்
முதன்மைக் கணக்கு அலுவலர்

பெறுநர்,

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக்கல்வி)
3. அனைத்து [illegible] வட்டாரக் கல்வி அலுவலர்கள்

| ஒரு நபருக்கு |
|---|
| ஒரு படிவம் |

முதன்மைக்கல்வி / மாவட்டகல்வி / வட்டாரக்கல்வி அலுவலரால்

ஓய்வுப் பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட தடையின்மைச் சான்று (NOC) விவரம்

( 01.01.2021 முதல் 12.02.2024 வரை)

| வ. எண் | ஓய்வு பெற்ற வட்டாரக்கல்வி அலுவலர் / தலைமையாசிரியர் / ஆசிரியர் / இதரப் பணியாளர் பெயர் | ஓய்வு பெற்ற அலுவலரின் பதவி மற்றும் அலுவலகத்தின் பெயர் / முகவரி | ஓய்வு பெற்ற நாள் (DD/MM/YYYY) | வழங்கப்பட்ட தடையின்மைச் சான்றின் (NOC) (Proceedings) விவரம் | எந்த தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் தடையின்மைச் சான்று வழங்கப்பட்டது (தணிக்கை அறிக்கையின் செயல்முறையின் விவரம் (முன்பக்கம் மட்டும்) | தடையின்மை சான்று வழங்கிய அலுவலரின் விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | அ. பெயர் :<br>ஆ. பதவி :<br>இ. தற்போது பணிப்புரியும் அலுவலகம் : |

மேற்கண்ட விவரங்கள் என்னால் முழுமையாக சரிப்பார்க்கப்பட்டது

முதன்மை / மாவட்ட / வட்டாரக்கல்வி அலுவலர்

_______________ மாவட்டம்

**சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

**ந.மு.எண்.3858/ அகத்தணிக்கை/2024-1, நாள்.31.01.2024**

பொருள்: பள்ளிக்கல்வித் துறை – அகத்தணிக்கை – அனைத்து அரசு / நிதியுதவி / பகுதி நிதியுதவி பள்ளிகள் /பயிற்சி நிலையங்கள் மற்றும் சார்ந்த அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் அகத்தணிக்கைக – தணிக்கைத் தடைகள் – தொடர்நடவடிக்கை மேற்கொள்ளுதத்தல் – சார்பாக.

பார்வை :
1. அரசாணை நிலை எண்.704, கல்வித்துறை (V2) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, நாள்.19.04.1982
2. அரசானை (நிலை) எண்.151, பள்ளிக்கல்வித்துறை, நாள்.09.09.2022
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.48853/ அகத்தணிக்கை(நி.ஆ(ம) மு.க.அ) / 2023-1, நாள்.28.09.2023
4. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.053130 /அகத/ 2023, நாள்.24.01.2024

------------------

பார்வை 3-ல் ஏற்கனவே வெளியிடப்பட்ட பள்ளிக்கல்வி அகத்தணிக்கை நெறிமுறைகள் மீள வலியுறுத்தப்படும் நிலையில், அதனைத் தொடர்ந்து, பள்ளிக்கல்வித் துறையின் கீழ் செயல்படும் அரசு / நிதியுதவி / பகுதி நிதியுதவி பள்ளிகள் / பயிற்சி நிலையங்கள் மற்றும் சார்ந்த அலுவலகங்களில் அகத்தணிக்கைகளின் அடிப்படையில் வெளியிடப்படும் தணிக்கை அறிக்கையின் மீது கீழ்க்கண்ட தொடர் நடவடிக்கைகள் உடனடியாக தவறாது மேற்கொள்ள சார்ந்த அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் :-

அ) முந்தைய மற்றும் நடப்பு நிதி சார்ந்த தணிக்கை தடைகள் குறிப்பாக 21(இ) மற்றும் 21(உ) அறிக்கை பெறப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் / பணியாளர்களின் **பணிப்பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.**

ஆ) இரண்டு வாரங்களுக்குள் சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் / பணியாளர்களுக்கு **தணிக்கைத் தடைகள் சார்பு செய்யப்பட வேண்டும்.**

இ) சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் / பணியாளர்கள் பணி மாறுதலில் செல்லும் போது நிதி சார்ந்த தணிக்கை தடைகள் குறித்து முன் ஊதிய சான்றில் (LPC) தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.

ஈ) ஓய்வுப் பெற்ற / பெறும் நாள் வரை தணிக்கை செய்யப்பட்டு பெறப்பட்ட தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மீது முந்தைய மற்றும் நடப்பு நிதி சார்ந்த தணிக்கை தடைகள் குறிப்பாக 21(இ) மற்றும் 21(உ) ஏதும் நிலுவையில் இல்லை என்பதை உறுதி செய்து, அதன் பின்னரே சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு "தடையின்மைச் சான்று" **(NOC) வழங்கப்பட வேண்டும்.**

[த.பி.பா]

உ) பார்வை 3-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி **இரண்டு மாதத்திற்குள்** தணிக்கை தடைகள் களைந்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. **மேலே பத்தி 1-ல் அ முதல் உ வரையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை தவறாது பின்பற்றுமாறும், பின்பற்றப்படாத நிலையில், அரசிற்கு ஏற்படும் கூடுதல் நிதி இழப்புகளுக்கு சார்ந்த ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் / பணியாளர்களுக்கு தடையின்மைச் சான்று (NOC) வழங்கிய அலுவலர் மற்றும் சார்ந்த சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர் (DDO) பொறுப்பாவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

முனைவர் க.அறிவொளி
பள்ளிக்கல்வி இயக்குநர்

8/1
5/7/24

பெறுநர்

1. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
{தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து தலைமையாசிரியர்களுக்கு சார்பு செய்து அதன் ஒப்புதல் கடிதம் அனுப்பப்பட வேண்டும்)

2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி / இடைநிலைக்கல்வி / தனியார் பள்ளிகள்)
{தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் / தலைமையாசிரியர்களுக்கு சார்பு செய்து அதன் ஒப்புதல் கடிதம் அனுப்ப வேண்டும்)

3. அனைத்து தணிக்கையாளர்கள், பள்ளிக்கல்வித் துறை
(அனைத்து பள்ளி / அலுவலகங்களில் தணிக்கை ஆரம்பிக்கப்படும் முன், முந்தைய / நடப்பு தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 21(இ) மற்றும் 21(உ) சார்ந்த அனைத்து தணிக்கை தடைகளையும் சார்ந்த பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்)

நகல்

1. பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-06 அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
2. தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-06 அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
3. நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர், சென்னை-06 அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது,